 ISSN 2394-6385 (Print)
ISSN 2394-6393 (Online)

# ஆற்றுகையாளனின் உடல், உள்ளம் பற்றிய அரங்க மானிடவியல் சிந்தனை

முனைவர்.மு.சுப்பையா [#1], சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ் [*2]

[1] உதவிப் பேராசிரியர், நிகழ்கலைத்துறை, புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி
[2] முனைவர்பட்டஆய்வாளர், நிகழ்கலைத்துறை புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.

வெளி,பார்வையாளர் இவற்றை இணைக்கும் புள்ளி ஆற்றுகையாளன் அல்லது நிகழ்த்துனன். நிகழ்வை ஆற்றுகை செய்கையில் ஆற்றுகையாளனின் மொழி பார்வையாளனைச் சென்று சேர வேண்டும். எனில் அவன் ஆற்றல் திறம்பட வெளிப்படுத்தப்பட வேண்டும். அதற்கு செப்பனிடப்பட்ட ஆழமானபயிற்சிகளும், அக்கலை பற்றிய ஆழ் மன அறிவியலும் ஆற்றுபவனுக்குத் தெரிந்திருக்கவேண்டும். ஆற்றுகையில் ஆற்றுபவனின் உடல்,உள்ளம் என்பன ஒருமித்த பாதையில் பயணிக்க வேண்டும். அப்பயணப்பதையில் ஆற்றுகையாளனின் சக்தி பார்வையளனுக்கு கடத்தப்படும்.. அவ்வாறு சக்தி கடத்தப்படும்போது அதற்கான வரவேற்பு மிகப்பெரியதாக இருக்கும்.

***Keywords* —** பாரம்பரிய வரலாறு; உளவியல் தாக்கம்; அரங்குசார் மானிடவியல்

தனியாக ஆற்றுகையாளனின் உடல், உள்ளம் பயணிக்கும் பாதையில் எவ்வாறான காரணிகள் அதனை பாதிக்கின்றது என்பது முக்கியமானது. அது பற்றிய கற்கை சார்ந்தவிடயம் மானிடவியல் ஆகும். இங்கு அரங்கியல் சார்ந்த மானிடவியல் பற்றிய அடிப்படையான கருத்தியலை முன்வைக்கும் முயற்சியாக அரங்கியல்சார் மானிடவியல் கற்கை நெறிக்குள் உள்ளடங்குகின்ற விடயங்கள் என்ன? நிகழ்த்துகையின் வெளிப்பாடு எவ்வெவ் விடயங்களில் தங்கியுள்ளது. என்பதுபற்றிய அடிப்படையான விடயங்களை இக்குறிப்புரை முன்வைக்கின்றது. அரங்கியல் சார்ந்த கற்கை என்பது பல்வகைப்படும். அதில் அரங்குசார் மானிடவியல் கற்கையானது முக்கியமாகும். ஒரு சமூகத்தின் பண்பாடு பழக்கவழக்கம் சார்ந்ததாக இருக்கும். அரங்கியல் சார்மானிடவியல் என்ற பெரும் பகுதிக்குள் - கலாச்சாரரீதியான, தத்துவரீதியான ,உடற் கூற்றியல் ரீதியான, வரலாற்றுரீதியான. என்பன அடங்கும். குறிப்பிட்ட நெறியாழ்கையில் வடிவமைக்கப்பட்ட நிகழ்த்துகை ஒன்றில் மானிடவியல் சார்ந்த தகவல்கள் மிகவும் பயனுடையது. மானிடவியல் கற்கை நெறியைக் கற்பதால் நிகழ்த்துகை சார்ந்த விரிவான பல விடயங்களை அறிந்து கொள்ளலாம். நிகழ்த்துனன், தான் சார்ந்த நிகழ்த்துகையில் பங்கு கொள்ளுதலும் உண்டு, அதேசமயம் தான் சாராத நிகழ்த்துகையில் பங்கு கொள்ளுதலும் உண்டு. (participatory and detached).

நிகழ்த்துகையின் போது ஒருவருடைய நடத்தையியல் சார்ந்த அது தொடர்பான உடல், உளரீதியான வெளிப்பாடு பற்றிய கற்றல் சார் நடவடிக்கை என்பன அரங்கியல் சார் மானிடவியல் கற்கைநெறிக்குள் உள்ளடங்குகின்றது. இது மனிதனுடைய சாதாரண வாழ்வியல் நடத்தையியல் முறையில் இருந்து வித்தியாசமானதாக இருக்கின்றது. இது உடல் மொழி, (உடலால் ஆற்றப்படும் கருமநுட்பம்) மற்றும் உளவியல் போன்ற நுட்ப மானவிடயங்களை அடிப்படையாகக் கொண்டது. (Theatre Anthropology is the study of the behaviour of the human being when it uses its physical and mental presence in an organized performance situation and according to principles that are different from those used in daily life. This extra-daily use of the body is what is called technique).

ஆற்றுபவனின் உடல் முதல் நிலைபெறுகின்றது. உடல் வெளிப்பாடு மூன்று முக்கிய விடயங்களை ஆற்றுகையில் வெளிப்படுத்துகின்றது. அல்லது முன்கொண்டு செல்கின்றது. இதனை இவ்வாறும் குறிப்பிடலாம். ஆற்றுகையின் அல்லது நிகழ்த்துகையின் வெளிப்பாடு மூன்று விடயங்களில் தங்கியுள்ளது.

- நிகழ்ச்சி செய்பவரின் ஆளுமை- அவருடைய உணர்வு நிலை, அவர்களின் கலைஞானம், அவர்களுடைய சமூகப் புரிந்துணர்வு, அவருடைய தனித்துவம் (characteristics that make them unique and one of a kind)
- பாரம்பரிய வரலாறு மற்றும் தற்கால சமூகநிலை—ஒரு கலைஞருடைய ஆளுமையில் இவை செல்வாக்கு செலுத்துகின்றன. (traditions and socio-historical contexts)
- நிகழ்த்துனன் தான் நிகழ்த்துகைக்காக செய்யும் பயிற்சியின் மேலதிகமாக பிரயோகிக்கப்படும் உடல் பாவனையும் அதன் போது ஏற்படும் உளவியல் தாக்கமும். (use of physiology)

இவ்விடயங்கள் அரங்க மானிடவியலில் கருதப்படும் முக்கிய விடயங்கள் ஆகும். மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களிலும் முதலாவது நிகழ்த்துனனின் ஆளுமை என்பது தனிப்பட்ட தனி ஒருவர் சார்ந்ததாக அமையப் பெறுகின்றது. இந்த ஆளுமையில் அவனது குடும்பம் பிறப்பு, வளர்ப்பு, கல்வி, தனிப்பட்ட சிந்தனைப்போக்கு என்பன இங்கு முக்கியம் பெறும்.

இரண்டாவது சமூகம் சார்ந்ததாக அமைகின்றது. அதன் பாரம்பரியம்,கலாசார முக்கியத்துவம், வரலாற்றுநிலை. சடங்கியல் அம்சங்கள் என்பன அனைத்தம் இச்சமூகத்துக்குள் அடங்கும்.

மூன்றாவதான விடயத்தில் ஆற்றுபவனின் நுட்பயுக்தி, காட்சி அமைப்புக்களின் தேவை தனித்துவப் பண்பு என்பவற்றைக் குறிப்பிடலாம். ஒருசமூகத்தில் இருந்தாலும், அவன் எவ்வாறு மற்றவர்களிடம் இருந்து தன்னை முன்னிலைப் படுத்துகின்றான். அதற்கு அவன் செய்யும் தனிப்பட்ட பயிற்சிகள் என்ன? அதன் செய்முறைகள் என்ன? அப்பயிற்சியின் முழுமையில் உணர்வுகளின் வெளிப்பாடு, இறுதியாக நிகழ்த்துகையின் முழுமை என்பன இதற்குள் அடங்குகின்றது.

நிகழ்துனனின் உடல் எவ்வாறு முக்கியமோ ஒரு நிகழ்வில், அதே போல் அவனது உள்ளமும் அவ்வாறகவே முக்கியம். உடல் எவ்வாறு காலம் செல்லச் செல்ல மாற்றமடைகின்றதோ அதே போல் உள்ளமும் மாற்றமடையும். உடல் - பயிற்சியின் போது குறிப்பிட்ட கலையின் தாடனத்தை பெறுகின்றது போல் உள்ளமும் அதற்கான லாவகத் தன்மையை தன்னுள் பெற்றுக் கொண்டுவிடும்.

நிகழ்த்து கலையின் முக்கியம் என்னவெனில் அது கணப் பிரசன்னமான கலைவடிவம் என்பதுடன் அதே கலை வடிவத்தை வெவ்வேறு இடங்களில் நிகழ்த்துகின்ற போது

அதன் நிகழ்த்துகையில் மாற்றங்களை நாம் அறிய முடியும். உடல் மாற்றம் உள்ளத்திலும் - உள்ளமாற்றம் உடலிலும் பாதிப்பை ஏற்படுத்தும். ஒரு நிகழ்த்துகையானது ஒவ்வொரு காலகட்டத்திலும் வேறுபட்டிருக்கும். நிகழ்வின் தேவை, நிகழ்த்துனனின் சூழல், பார்வையாளர், நிகழ்த்தும் இடம் என்பவற்றிற்கேற்ப மாற்றங்கள் செய்யப்படுகின்றது.

இவ்விடத்தில் உளவியலின் முக்கயத்துவம் தெளிவாகும். உளவியல் காரணியைப் பொறுத்தவரையில், உதாரணமாக ஒருவருடைய நிறை, சமநிலை, முள்ளந்தண்டின் நிலை, கண்ணின் பார்வைப் பரப்பு இவை நிகழ்வின் போது வெளிப்படுத்தப்படும். அனுபவத்திலும் நிகழ்வின் சக்தி வெளிப்பாட்டிலும் பங்கு கொள்கின்றன. குறிப்பாக பத்மாசுப்ரமணியம் என்ற நர்த்தகி சிறுவயதில் கடினமான பயிற்சியின் தாடனத்தால் அடவு முறைகளையும் அபிநய முறைகளையும் வெளிப்படுத்தினார். அதேபயிற்சிமுறைகளும் அபிநயமுறைகளும் அவர்கள் உடலில் ஆழமாக வேறுன்றியதனால் அவர்களின் எவ்வகையான அசைவுகளும் ஆடலை வெளிப்படுத்துவதாகவும், பார்ப்பவருக்கு ரசத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். இன்றைய காலத்தில் அவருடைய செயல்கள் நர்த்தனமாகவும்-அவர் நர்த்தனம் செய்யும் போது அதுவே செயலாகவும் மாற்றமடைந்து ஒன்றை ஒன்று பிணைந்ததாக மாற்றம் பெற்றுள்ளதை நாம் அவதானிக்கலாம்.

அதேபோல் பிகுருமகராஜ் அவர்களையும் குறிப்பிட வேண்டும். பிகுருருமகராஜ் கதக் நடனத்தில் ஆழ்ந்த தாடனத்தை பெற்றுள்ளதோடு அவருடைய அனுபவம் சார்ந்த ஆற்றல் அவர் முன்வரும் பொது அவர் சார்ந்த சக்தி மற்றவர்களை அவர் பக்கம் ஈர்க்கத்தக்கதாக அமைகின்றது என்பதுடன் அவருடைய நிகழ்த்துகையும் செயல்களும் ஒரு தனிப்பட்ட முன்நிலைப்பட்ட தன்மை கெடுக்கின்றது. அது அவருக்கு மட்டுமல்ல இந்தத் துறைகளில் ஆழமான தாடனம் உள்ளவர்களுக்கும் அனுபவ ரீதியாக அவர் பெற்றுக் கொண்டதற்குமான வரவேற்பாகும். இதனை சற்று ஆழமான நிலையில் பார்ப்பதனூடாக சில விடயங்களைப் புரிந்து கொள்ளலாம். அதாவது மனித உடலுக்கு சில சக்திகள் உண்டு, - அது மூலாதாரச் சக்தி. உடலின் இயக்கமே மூலாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒரு செயலை தொடர்நது ஈடுபடும்போது, பயிற்சி பெறுபவரின் உள்ளம் ஒருமை தன்மை அடைகின்றது. உடலும் அதற்கு இசைந்து கொடுகின்றது. அப்போது அந்த மூலாதாரச் சக்திமேலும் வலிமை பெறுகின்றது.

இது தான் அரங்கியல் மானுடவியலில் உள்ள முக்கியத்துவம். பரதநாட்டிய நர்த்தகியின் உடலும் ,உள்ளமும் ஆசியப்பண்பாட்டில் இருந்து வந்தது மட்டுமல்ல, இந்திய அழகியலின் ஒட்டு மொத்த அழகியலையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கும். இது இந்திய அரங்கியல் மானிடவியல் தன்மையில் இருந்து வெளிப்படுத்தும் முறையினூடாக வருவதாகும். எனவே ஒருநிகழ்த்துகையின் போது ஆற்றுபவனில் ஏற்படும் உடல், உளமாற்றங்கள் மற்றவர்களை சென்றடையுமுன் ஆற்றுபவனுக்குள் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இது பற்றிய ஆழமான விடயங்கள் பகிரப்பட வேண்டியுள்ளது.

- அரங்கும் மானிடவியல் சார்ந்த கற்கை என்பது இத்துறையில் ஆற்றுகை சார்ந்த ஆளுமையை விருத்தி செய்யும் தொழில் நுட்பத்தையும், அதனை எவ்வாறு கற்றுக்கொள்ளப் போகின்றோம் என்பது பற்றியதாகவும் அமைகின்றது. (Study of the principles of this extra-daily use of the body and its application to the actor's and dancer's creative work. Knowledge of the principles that govern the scenic bios can make it possible for one to learn to learn rather that to learn a technique)
- வரையறுக்கப்பட்ட சிலயுக்திகளை கடப்பதற்கு முன்னர் யுக்திகளைக் கையாள்வது எப்படி என அறிந்து கொள்வதற்கான யுக்தி(the secrets of technique which one must possess before one can go beyond technique)
- மேலைத்தேய நிகழ்வுகளில் சாஸ்த்திர இலக்கண ரீதியான நுட்ப ஒழுக்கம் இருப்பதில்லை. முாறாக ஆசிய நிகழ்வுகளில் சாஸ்த்திர இலக்கண ரீதியான கட்டுக் கோப்புடனான யுத்திகள் வடிவமைக்கப பட்டிருக்கும்.

குறிப்பாக ஆசிய நாடுகளில் வரையரையான கலைகளை கற்பிக்கும் முறைமை இன்றும் நிலவி வருகின்ற தன்மை காணப்படுகின்றது. இந்திய கலைகளில் ஆரம்பப் பயிற்சிகள் காணப்படும். (கர்நாடக சங்கீதத்தில்-ஸ்வர வரிசை, ஜண்டை வரிசை, மேல்ஸ்தாயி வரிசை, அலங்காரம் என்பன அடிப்படையான ஆரம்பப் பயிற்சிகள். புரத நாட்டியத்தில் தட்டடவு, நாட்டடவு, பரவலடவு, குத்தடவு என்பன ஆரம்ப பயிற்சிகள் ஆகும்.) அதனுடைய தொழில்நுட்பம் என்பது இங்கு முக்கியம் பெறுகின்றது. ஆரம்பப் பயிற்சிகள் என்பது கலை வெளிப்பாட்டின் அடிப்படையான விடயமாக இருக்கும், அதே சமயம் அதுவே ஆதாரமானதும் முக்கியமானதுமான ஒரு தொழில் நுட்பம் ஆகும். இந்திய மரபில் குருவின் ஆசியுடன் கற்கும் முறை காணப்படுகின்றது. இது பாரம்பரியத் தன்மை கொண்டதாகும்.

இந்த அடிப்படைத் தெளிவின் பின் அரங்கியல் யுக்தி முக்கியம் பெறுகின்றதுடன் அரங்கில் எவ்வாறான தன்மையில் நிகழ்த்துனன் தன்னை அளிக்கைச் செய்ய தயார் படுத்துகின்றான் என்பது பற்றிய யுக்தியும் தெளிவானதாக அமையப் பெற்றிருக்க வேண்டும். சாஸ்திரீய இலக்கணம் இந்தியக் கலைகளுக்கு அமையப் பெற்றுள்ளது. அதற்குக் காரணம் இந்தியக் கலைகளுக்கு இந்தியக் கடவுளர்களுக்குமான தொடர்பு கற்பிக்கப் படுகின்றது. இந்தக் கற்பிதத் தன்மை மேற்கத்திய கலைகளுக்கு இல்லை. இதனால் கற்பிக்கும் ஆசிரியன் குருவாகக் கருதப்படுகின்றதுடன் அக்குருவையே கடவுளாகவும் கருதும் தன்மை ஆசியக் கலைகளுக்கு இருக்கின்றது, என்பதுடன் குறிப்பாக இந்தியக் கலைகளுகள் இது காணப்படுகின்றது. இந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு ஆசியகலைஞர்கள் தம்மை மேம்படுத்துகின்றனர். ஆனால் மேற்கத்தைய கலை வல்லுனர்கள் இத்தன்மையில் தம்மை முன் நிலைப்படுத்துவது இல்லை. நிகழ்த்துனர்களின் உடலும் உள்ளமும் எப்பண்பாட்டிற்குள் இருந்து வருகின்றதே அப்பண்பாட்டின் தன்மைகளைத்தான் நிகழ்வுகளில் காட்டி நிற்பார்கள். மேற்கத்தைய கலைஞர்கள் ஆசியக் கலைகளைக் கண்டு வியப்பதற்கு இது ஒரு காரணம். மானிடவியல் சார் அரங்கியல் பற்றிய ஆழமான கருத்தியல் இன்றைய காலத்தில் அரங்கில் முனைப்பு பெற்று வருகின்றது.

## துணை நூற் பட்டியல்

[1] Eugenio Barba and Nicola Savarese, A Dictionaty of Theatre Anthropology – The Secret Art of the Performer, Second Edition,Routledge, Oxon, 2006

[2] R Venkateswaran, "India SevviyalNatanam" (Tamil), Translation in Tamil of Dr.KapilaVatsyayan's book 'Indian Classical Dance', Publications Division, Ministry of I & B, Govt of India, New Delhi